(பதிப்புரிமையுடையது)

உ
சிவமயம்

nselva.com



விவேகானந்த சபை கொழும்பு
அகில இலங்கை
4 சைவசமய பாடப்பரீட்சை - 2016
தரம் நான்கு



கால அளவு	45 நிமிடம்
புள்ளிகள் : 100	

இல.	14657
மாணவர் சுட்டெண் :	

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

1. சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளம் இடுக.

1. நாம் வாழும் உலகம் சிவமயமானது. ( )
2. ஆண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும். ( )
3. மாணவர்கள் ''சீடர்கள்'' என அழைக்கப்படுவர். ( )
4. மார்கழி மாதத்தில் தீபத்திருநாள் வருகிறது. ( )
5. மாணிக்கவாசகரால் திருவாசகம் பாடப்பட்டது. ( )

(5 புள்ளிகள்)

2. மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. அழித்தல் தொழிலைப் புரிபவர்
   1. பிரம்மா 2. விஷ்ணு 3. சதாசிவன் 4. உருத்திரன்

2. நல்வழி என்ற நூலைப் பாடியவர்
   1. ஔவையார் 2. குமரகுருபரர்
   3. குசேலர் 4. காரைக்காலம்மையார்

3. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள மாவட்டம்
   1. யாழ்ப்பாணம் 2. மட்டக்களப்பு 3. முல்லைத்தீவு 4. திருகோணமலை

4. இறந்தவர்களுக்கு பிதிர்க்கடன் செய்யும் நாள்,
   1. ஆனிமகம் 2. ஆடிச்சோதி
   3. ஆடிஅமாவாசை 4. பங்குனி உத்தரம்

5. சைவத்திருமுறைகள் ஓலைச்சுவடிகளாக வைக்கப்பட்டிருந்த தலம்
   1. தில்லை 2. சீர்காழி 3. திருப்புகலூர் 4. திருமுனைப்பாடி

(5 புள்ளிகள்)

3. "அ" பகுதிக்குப் பொருத்தமானவற்றை "ஆ" பகுதியிலிருந்து தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.

"அ"		"ஆ"
1. பொதிசோறு பெற்றவர்	( )	1. அருணகிரிநாதர்
2. பிதிர்ச்சாபம்	( )	2. திருநாவுக்கரசர்
3. கந்தரநுபூதி	( )	3. கீரிமலை
4. தஞ்சைப் பெருங்கோயில்	( )	4. காரைக்காலம்மையார்
5. புனிதவதியார்	( )	5. இராஜராஜசோழன்

(5x2 = 10 புள்ளிகள்)

4. பொருத்தமான சொல்லைக் கூட்டினுள் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டினுள் எழுதுக.

கௌசிக முனிவர்	கந்தபுராணம்	தொண்டு	திருவாசகம்	திருப்பல்லாண்டு

1. "திகடசக்கரச் செம்முகம் ஐந்துளான்" என்ற முதலடியுடன் தொடங்கும் பாடல் நூல்.....
2. ..... என்ற நூல் சேந்தனரால் பாடப்பட்டது.
3. பஞ்சபுராண வரிசையில் தேவாரத்தை அடுத்து.....பாடப்படும்.
4. கைம்மாறு கருதாது செய்யும் பணி.....எனப்படும்.
5. .....கொக்கைப் பார்த்தபோது அது எரிந்து சாம்பலாயிற்று

(5x2 = 10 புள்ளிகள்)

5. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. உலகத்துக்குக் கருத்தா யாவர்?
.....
2. வேதசிவாகமங்களில் விதிக்கப்பட்டவை யாவை?
.....
3. சிவனை வழிபடுஞ் சமயத்துக்குப் பெயர் யாது?
.....
4. சைவசமயிகள் சரீரத்திலே அவசியமாகத் தரிக்க வேண்டிய அடையாளம் யாது?
.....
5. தோப்புக்கரணம் போட்டு வழிபடப்படும் கடவுள் யார்?
.....
6. சிவதரிசன பலனைத் தரும் கடவுள் யார்?
.....
7. ஆலயங்களில் அதிகாலையில் நடைபெறும் பூசையை எவ்வாறு அழைப்பர்?
.....

(7x2 = 14 புள்ளிகள்)

6. பின்வரும் கூற்றுக்கள் யாரால் யாருக்கு கூறப்பட்டது என எழுதுக.

1. "இக்கனி முன்பு தந்ததை விடச் சுவையானது. இதை எங்கு பெற்றாய்?"
   யாரால் ..... யாருக்கு .....

2. "என்னிடம் பொதிசோறு இருக்கிறது. நீங்கள் அதனை உண்டு பசியாறலாம்"
   யாரால் ..... யாருக்கு .....

3. "கையிலே கனலை ஏந்திய உங்கள் பெருமானுக்கு விளக்கு எதற்கு"
   யாரால் ..... யாருக்கு .....

4. "எனது உறைவிடம் காசி. எனது உறவினர்கள் சிவனடியார்கள். சித்து விளையாட்டு எனது தொழில்"
   யாரால் ..... யாருக்கு .....

(4x4 = 16 புள்ளிகள்)

7. பின்வருவன பற்றி ஐவைந்து வாக்கியங்கள் எழுதுக.

நிறைகுடம்

.....

.....

.....

.....

.....

(5 x 2 = 10 புள்ளிகள்)

சைவசமயப் பழக்கவழக்கங்கள்

.....

.....

.....

.....

.....

(5 x 2 = 10 புள்ளிகள்)

8. பின்வரும் திருப்பாடல்களுள் எவையேனும் இரண்டை வரிக்கிரமமாக எழுதுக.

1. "வேதமோதி ....."
2. "பொன்னார் மேனி ....."
3. "முத்தி நெறி ....."
4. "பாலுந்தெளிதேனும் ....."

1. .....

.....

.....

.....

(10 புள்ளிகள்)

2. .....

.....

.....

.....

(10 புள்ளிகள்)